உளவியல் சஞ்சிகை

# நான்

மலர்: 23 இதழ்: 1




## சிறப்புமலர் - தை பங்குனி 97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் மகிழ்ந்திருக்க
உடை அழகு அவசியம்

உங்கள் அழகிற்கு மெருகூட்டும்

- ★ சேட்டிங் ★ சூட்டிங்
- ★ சிறுவர்களுக்கான ஆடைவகைகள்
- ★ ஜப்பான் இந்திய சாறிவகைகள்
- ★ றெடிமெற் ஆடைகள்

புதிய புதிய நவநாகரீக ஆடைகளைத் தெரிவுசெய்ய
நாடுங்கள்

# சிவராதா
## பிடவை மாளிகை

16 B, பெரியகடை யாழ்ப்பாணம்.

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

பொது சன நூலகம்
16 MAY 1997
மாநகராட்சி மன்றம்

41

# உளவியலின் தேவை

ஒரு வருட கால இடைவெளியின் பின்பு மீண்டும் 'நான்' உங்கள் கரங்களில் தவழ்கின்றான்.

இடம் பெயர்ந்த அகதிவாழ்வு, மீளக்குடியமர்ந்த புனர்வாழ்வு போன்றன எமது உடல், உள வாழ்வில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது உண்மை,

இப்பாதிப்புக்கள் எம் ஆளுமையின் வளர்ச்சியை அதிகரித்து இருக்கும் அல்லது அழித்து இருக்கும்.

தொடர்ந்து கொண்டிருக்கின்ற போரும் அதன் தாக்கமும் உளவியலின் தேவையை எம்மத்தியில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இவற்றை உணர்ந்தே பல சிரமங்கள் மத்தியிலும் இவ்வுளவியல் சஞ்சிகையைத் தொடர்ந்தும் வெளியிட வேண்டும் என்று முன்வந்துள்ளோம.

உங்கள் பலரின் வேண்டுகோளிற்கும், எதிர்பார்ப்புகளுக்கும் 'நான்' உண்மையில் உங்கள் உளவியலாளனாக நின்று உங்கள் உளவியல் தேவைகளில் என்றும் உங்களோடு துணை நிற்பான்.

புத்தாண்டில் உடல், உள நலத்தோடு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் உளவியல் சஞ்சிகை

மலர்: 23 இதழ்: 1
தை — பங்குனி 1997



ஆசிரியர்:
S. எட்வின் வசந்தராஜா
O.M.I. . B.Th.

இணை ஆசிரியர்:
ஜீவனதாஸ் பெர்ணான்டோ
O.M.I. . B.A.

நிர்வாகக்குழு:
அ.ம.தி. மெய்யியல் மாணவர்கள்.
ஜோசப்பாலா.

ஆலோசகர்:

| | |
|---|---|
| டேமியன் | O.M.I, M.A. |
| செல்வரட்ணம் | O.M.I, Ph.D. |
| ஜீவாபோல் | O.M.I, M.Phil |
| டானியல் | O.M.I, M.A. |


உள்ளே...


உறவும் தொடர்பும்
என். சண்முகலிங்கன்

அப்பா கீறிய கோடு
சுண்டுக்குளி சுவர்ணா

உறவும் பிரிவும்
யோகா

வழிகாட்டும் ஆளுமை
ரூபன் மரியாம்பிள்ளை

எறும்பு சக்தி

ஆசிரிய உள மாண்பு
பி. எவ். சின்னத்துரை

சிறுவர்களைக் காப்பாற்றுங்கள்
ரேணுகா

பல்சுவைக் கலசம்

உலகில் உயர...
ஏ. பி. வி. கோமஸ்


## நான் உங்களுடன் தொடர்புகொள்ள...

உங்கள் சந்தாக்களை பதிவுசெய்வதுடன் தற்போதைய முகவரிகளையும் தந்து, உங்கள் நண்பர்களுக்கும் நான் அறிமுகமாக உதவுங்கள்


தொடர்பு:

'நான்' ஆசிரியர்,
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



ஆண்டுச் சந்தா ரூ 50-00
(தபால் செலவுடன்)

தனிப்பிரதி ரூ 12-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்.

# உறவும் தொடர்பும்

என். சண்முகலிங்கன்
சமூகவியல்துறை,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

நல்ல தொடர்பு, சுமுகமான குடும்ப வாழ்வின் அடிப்படை. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், புரியவைக்கவும் தொடர்பே கைகொடுப்பது. நாம் சொல்வதை அப்படியே மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அது நடக்காத போது ஏமாற்றமடைகின்றோம்.

'என்னோடு அவர் கதைத்து கனகாலம்'
'எனக்கு அவரோடு கதைக்க விருப்பமில்லை'
'நான் கதைக்கிறதை அவர் கேட்பதாயில்லை'

முரண்படும் உறவுகளிடை, ஆளையாள் குற்றஞ்சாட்டும் இத்தகு குரல்களை அடிக்கடி கேட்கமுடிகிறது.

## ஏன் இந்த அவலம்?

கவனமாகக் கேட்க நாம் தயாராக இல்லாதிருக்கிறோம். எனது கதையைச் சொல்ல இருக்கிற ஆர்வம், அடுத்தவர் கதையைக் கேட்பதில் இருப்பதில்லை.

## மாயத்திரைக்குள்

இத்தகு நிலைமைக்கு உரமூட்டும் விதமாக, இன்றைய நவீன வாழ்வும் துணைபோகிறது. காசு தேடும் தொழில் பயணத்தில் ஆளையாள் சந்திக்கும் - தொடர்பு கொள்ளும் பொழுதே அருந்தலாகி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்ற பொழுதும் 'மாயத்திரைக்குள்' தலையை நுழைப்பதில் விழுங்கப்பட்டுவிடுகிறது. மாயத்திரையாக இங்கு குறிப்பிடப்பட்டது, இன்று வீட்டுக்கு வீடு வாசல்படியாக ஆக்கிரமிக்கும் தொலைக்காட்சி தரிசனத்தைதான்.

ETV I, ETV II, MVT, NTV என நீளும் காட்சி அலைகள் ரூபவாகினி, தூரதரிசன் எனவும் -- வீடியோ திரைக்காட்சிகள் எனவும், கண்டறியாதனவெல்லாம் காட்டும் மாயத்திரைகளுக்குள் விழுங்கப்படுவது நமது நேரம் மட்டுமல்ல; மனங்கள் மட்டுமல்ல; நமது உறவு தொடர்புகளும் தான்.

திட்டமிட்டு தொடர்பு கொள்வதை விரும்பாது இத்த தப்புதல்களுள் தலையை நுழைப்பது ஒருரகம் — அறியமைமலேயே தொடர்புகளை இழப்பது மறுரகம் — எப்படியோ தொடர்பு இல்லாத நிலையில், உடையும் உறவு நிலைமட்டும் அதிகரிக்க வழியேற்படுகிறது

## உறவில் ஆர்வம்

தொடர்பு கொள்ளும் ஆர்வம், தொடர்பை மறுக்கும் தப்புதல் நிலையினின்றும் விடுபடல் என்பனவே முதலில் வேண்டப்படும் — அதன்பின்னரே உரிய தொடர்பு சாத்தியமாகும் — திறனான கேட்டல் சாத்தியமாகும்.

## திறனான கேட்டல்

திறனான கேட்டல் என்பது, முழுமையாக உங்கள் கவனத்தை மற்றவரிடம் தருதல், உங்கள் இணைக்கு முழுமையாக உங்கள் காதை தருவது- பெறத்தகும் பரிசாக கருதப்படும். அதுவே இனிய நெருக்கத்தையும் கொண்டுவரும் ஒருவர் உணர்வை - வலியை புரிந்து கொள்ளும் empathy நிலைமட்டும் வாய்த்து விட்டால்......

பின் உறவுப் பிணைப்பை யாரலும், எதனாலும் அசைக்க முடியாது —

empathy க்கான அடிப்படை தேவை,
நிபந்தனை அற்ற ஏற்றுக் கொள்ளல்
' நீ இப்படி இருந்தால், இதனை தந்தால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அப்படி நடப்பேன்' என்கின்ற வியாபார பேரம் பேசல் நிலை யாக இல்லாமல் இயல்பான, அன்பின் வழியான தொடர்பாக அமையும் எனவே உறவும் இயல்பாகிறது.

எங்கள் சமுகத்தில் இந்த விடயம் மிகவும் அருந்தலாக அமைந் திருப்பது; இங்கு நிலவும் பல முரண்பாடுகளின் அடிப்படையாய் இனங்காணப்படுவது–

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைஞர் நூலகம்.

**என்ன செய்யலாம்?**
**தொடர்பியற் பயிற்சி**

இன்றைய உளவியலும், உளவளத்துணை அறிவு - அனுபவங் களும் சொல்லும் 'தொடர்பு' பற்றிய அறிவும் பயிற்சிகளும் இந்த தொடர்புக் கலையில் நாம் தேற நிச்சயம் உதவும்.

அந்த அறிவுச் செல்வத்தை உள்வாங்கவும், நம் காதுகளை மூடாமல் கேட்கும் சித்தம் வேண்டும். மனம்விரும்பி இந்தப் பயிற் சியில் தேறும்போது இனிய தொடர்பும் - அதன் வழி சுமுக உறவும் கைவசமாகும்.

---

**நூல் நயம்**

## மகிழ்ச்சியின் இரகசியம
(கட்டுரைத் தொகுதி)

*நூலாசிரியர்;-* **யோசப் பாலா**

''இதில் உள்ள அத்தியாயங்கள் பல்வகைக் கோணத்தில் வாழ் வியலைச் சுட்டி நிற்கின்றன. இவை எல்லோர்வாழ்விலும் நடக்கும் சம்பவங்கள். அப்பாத்திரங்களில் ஒன்றிக்கும் ஆர்வலராய் வாசகர்கள் மாற நடைமுறைச் சம்பவங்களை இணைத்துள்ளார் நூலாசிரியர். உளவியல் சார் நூல்கள் பல ஆங்கிலத்தில் வெளிவந்த போதும் எமது மண்ணில் மிக அரிதாகவே இன்னும் இக்காலத்தில் 'நான்' உளவியற் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்புக்களை மகிழ்ச்சியின் இரகசியமாக வெளியிட முற்பட்டது பாராட்டிற்குரியதே''

*அணிந்துரையில்* **எஸ். டேமியன்** *(அ.ம.தி)*
**விரிவுரையாளர், யாழ். மருத்துவபீடம்**

*விலை;* **50/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● உளவியல் தொடர்......

# அப்பா கீறிய கோடு

★ கண்டுக்குளி சுவர்ணா

உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் வெள்ளை மாளிகை, அதற்கு முன்னால் பெரிய காவலரண், யாழ் நகரின் புதிய எல்லை அங்கு தான் இருந்தது. வரிசையில் நின்று ஆட்பரிசோதனைக்குட் படுத்தப்பட்ட பின்பு வலம் இடமாக நெழிந்து செல்லும் (Zig Zag) முட்கம்பி பாதைகளுக்கிடையில் ஒருவர் பின் ஒருவராக வளைந்து வளைந்து செல்ல வேண்டும். ''இன்னும் கொஞ்சம் மொத்தமான ஆளாக இருந்திருந்தால் கம்பி குத்தியிருக்கும்'' என கேலியாக முன்னால் செல்லும் பெண் பிள்ளையைப்பார்த்து பெடியள் பகிடி விட ''கொல்'' என்று எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

பின்னால் அவர்களை திரும்பி முறைத்துப் பார்த்த அந்தப் பிள்ளை, பகிடி விட்டவர்கள் சிரேஷ்டமாணவர்கள் எனஅறிந்ததும் ''ராகிங் முடியும் வரை பொறுத்துத் தானே ஆகவேண்டும்'', என மனதிலுள் திட்டிக் கொண்டு கொஞ்சம் வேகமாக நடக்கத்தொடங்கினாள். ''ஆள் மட்டும் போவதானால் பரவாயில்லை. ஸ்கூட்டரோடு போவது தான் கஷ்டம்'' என்று ஒரு நரைத்த முடியுடன் ஒரு பெரியவர் தன் முன்னால் கஷ்டப்பட்டு வியர்ந்து விறுவிறுக்க நடந்து செல்லும் பேராசிரியர் சதாசிவத்தைப் பரிதாபத்தோடு பார்த்தார்.

''ஓம் பாருங்கோ முந்தியெல்லாம் நேர்ப் பாதையில் ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்தால் போதும் மருத்துவபீட வாசலில் வந்து இறங்கலாம்...... 5 நிமிடங்கள் கூட எடுக்காது'' என்று பெருமூச்சுடன் கூறிவிட்டு ''என்ன சொல்லுறியள் மிஸ்டர் கங்கா'' என்று முன்னால் நடந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கங்காதரனை, பக்கதானம் போடும்படி அழைத்தார். அப்போது கங்கா பின்னால் திரும்பியபடி ''எங்களுக்கு ஒவ்வொரு நாளும் இப்படியே நடந்து பழகிப் போச்சுது, நீங்கள் இன்றைக்குத்தானே பிரச்சனைக்குப் பிறகு வாறியள்........ பிறகு பழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிவிடும்'' அதற்கும்..... பார்ப்போம் என்றார் பேராசிரியர் சதாசிவம்.

□ □ □

வியர்வையைத் துடைத்தபடி மருத்துவ பீட வாயிலில் காலடி எடுத்து வைத்த சதாசிவத்துக்கு இதயம் பாரம் தாங்காமல் அடி வயிற்றில் இறங்கிவிட்டது போல் இருந்தது, முன்பெல்லாம் ஒவ்வொரு நாளும் காலை வணக்கம் கூறி சிரித்து நிற்கும் ரோஜாச் செடிகள் பொலிவிழந்து வாடி விதவைக் கோலத்தில் நின்றன. பூப்படைந்த பெண்போல் மலர்ந்து நிற்கும், கனகாம்பரத்தை அவர் தாண்டி, விரிவுரை மண்டபத்திற்கு செல்லும் போது ''கனகாம்பர தாரினே நமக'' என்று மந்திரம் உச்சரித்துக் கொள்வது ஞாபகத்திற்கு வரவே அப்பாத்திகள் இருந்த இடத்திற்கு சென்றார். அங்கு வாகனங்களின் ரயர் அடையாளங்களின் மத்தியில் கனகாம்பரக் கன்றுகள் கற்பழிக்கப்பட்டிருந்தன. ஏமாற்றங்களோடு சேர்ந்து ஸ்கூட்டரையும் ஓரமாய் நிறுத்திவிட்டு மருத்துவபீட முன் மண்டபத்தை நோக்கி நடந்தார். வழி யெல்லாம் நிரையாக, உருண்டை உருண்டையாக நிற்க வேண்டிய சவுக்கு மரங்கள் கைகளும், கால்களும் முறிந்தவையாக கிளைவிட்டுப் பேய்க்கோலம் பூண்டிருந்தன.

பேராசிரியருக்குத் தான் கண்ணும் கருத்துமாக வளர்த்தமகள் அட்டாக்காலியாக மாறிவிட்டது போல் ஒரு பிரமை, அதுவரை நெஞ்சு படபடவெனத் துடிக்கத் தொடங்கியது. தனது நாடியைப் பிடித்துப் பார்த்தார். நாடித் துடிப்பு அதிகமாகவே இருந்தது. ஒருவாறாகத் தன்னைத் சுதாகரித்துக்கொண்டு முதலாம் மாடியை அடைந்தார்.

சுவரெல்லாம் யார் யாரோ தங்கள் பெயர்களைப் பொறித்து வைத்திருந்தார்கள், புறா எச்சம் சுவர் முழுவதும் புள்ளிக் கோலம் போட்டிருந்தது. ஆறு மாத இடம்பெயர்வுக்குள் இவ்வளவு மாற்றமா? கடந்த 'மெடிக்ஸ்வீக்' இல் முதலிடம் பெற்ற மாணவர்களின் கவிதை அவருக்கு அப்போது ஞாபகம் வந்தது. 'ஓ வெள்ளை மாளிகையே உன் உள்ளச்சுவர் எவ்வளவோ களங்கமற்றது'' ஆமாம் அந்த மாணவன் இன்று உயிருடன் இருந்திருந்தால்......''ஓ வெள்ளை மாளிகையே நீ புள்ளி மாளிகையாக மாறியதேன்?'' எனப் பாடியிருக்க மாட்டானா? அவன்தான் சாவகச்சேரியில் செப்ரிசீமியாவால் இறந்துவிட்டானே என்று தன் நினைவுகளை தொண்டைக்குள் சமாதியாக்கியபடி நடந்து தன் அறையை அடைந்தார்.

அவரதுமனம் அன்று அமைதியிழந்து அலைக்களிக்கப்பட்டவாறே இருந்தது. ஐந்து நிமிடங்கள் தானும் அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை. எல்லாம் அலங்கோலமாக இருப்பதுபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், ஒன்றும் நேராக இல்லை என்றும் உள்மனம் அவருக்குத் திரும்பத்திரும்ப சொல்லிச் கொண்டிருப்பதை உணர்ந்தார். ‘‘இங்கே ஒன்றும் ஒழுங்காக இல்லையே’ என்று எண்ணியபடி நூலகப் பிரிவுக்குச் சென்றார். அங்கு புத்தகத் தட்டில் புத்தகங்கள் எல்லாம் நேரரக அடுக்கப் படாமல் இருப்பதுபோல் ஒரு பிரமை. உடனே புத்தகங்கள் ஒவ்வொன்றையும் எடுத்து நேராக அடுக்கத் தொடங்கினார். இதைக் கண்ட நூலகப் பொறுப் பாளர் நெருப்பில் கால் வைத்த வன் போல் துள்ளி எழுந்து ‘‘ஐயா என்ன வேலை செய்து விட்டீர்கள்? இது எங்கள் தொழில் ......மன்னிக்கவும்’’ எனக் கூற, அடடா, என்னை மன்னிக்கவும்’’ நான் என்ன, செய்கின்றேன் என எனக்கே தெரியவில்லை’’ எனக் கூறிவிட்டு வெளியேறினார்.

தன் மனதில் ஏற்பட்ட குழப்ப நிலையை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அவ ரால் கட்டுப்படுத்த முடியவில்லை. நூலகத்தில் தான் நடந்து கொண்ட விதம், அவரை வெட் கப்படவைத்தது தன்னைத்தானே திட்டியபடி மின்விசிறியைப் போட்டுவிட்டு ஆசனத்தில் உட் கார்ந்தார். அப்போது அவரது கைகள் சுத்தமற்று இருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. உடனே எழுந்து சென்று கைக ளைக் கழுவிவிட்டு வந்து உட் கார்ந்தார். மின் விசிறியின் காற்

‘‘எல்லாம் அலங்கோலமாக இருப்பது போலவும், ஒன்றும் நேராக இல்லை என்றும் உள்மனம் திரும்பத் திரும்பச் சொல்லியது’’

றில் கைகள் உலர்ந்து போக மீண்டும் கைகள் அழுக்காக இருப் பது போன்ற உணர்வு ஏற்பட் டது உடனே விறுக்கென எழு ந்து சென்று கைகளைச் சவர்க் காரம் இட்டுக் கழுவிவிட்டு வந்து உட்கார்ந்தார். அந்த நினைவு அவரை விட்டபாடாக இல்லை ஒட்டுண்ணிபோல் அவரது சிந் தனையை உறிஞ்சிக் கொண்டி ருந்தது. மீண்டும் மீண்டும் கை களை கழுவினார் தன்னைக் கட் டுப்படுத்த முயற்சித்த போது நெஞ்சு படபடவென அடிக்கத் தொடங்கியது வியர்வை ஆறாக ஒடத் தொடங்கியது.

‘‘சார் உள்ளே வரலாமா’’ என குரல் கேட்க சதாசிவத்தின் மன மும் உடலும் ஒரு நிலைப்பட் டன. ‘‘யேஸ் கம் இன்’’ என்ற படி நிமிர்ந்தார். சிரேஷ்ட விரிவு ரையாளர் கங்கா ‘‘சார் மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரி வுரைக்குப் போக மறந்து விட் டீர்களா?’’ என்று கேட்டார். திடு க்குற்றவராய் ‘‘இன்று என் மனம் சரியாக இல்லை, எனக்கு ஓய்வு வேண்டும் போல் இருக்கிறது. தயவுசெய்து மாணவரிடம் அறி வித்து விடுங்கள்’’ என்று கூறி விட்டு தன் வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினார். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தைத் தொடும்

# உறவும் பிரிவும்

**வசந்தகம்**
*சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை.*

**அன்பு நண்ப!**

**நலம் பல;** நாம் உறவாடி, உரையாடி பலவற்றைப் பகிர்ந்து பல நாட்களாகிவிட்டது. உறவும் பிரிவும் எம்மை எப்படி வாட்டு கிறது பார்த்தாயா? எம் உறவும் பிரிவும் மறக்கமுடியாத பல நினைவுகளை மீட்கவைக்கிறது. உன் அனுபவமும் புதிதாக இருக் கும். அதில் உள்ள உண்மைகளை பகிர்ந்து கொள்வாயா?

சில பிரிவுகள் பல உறவுகளைத் தருகிறது. சில உறவுகளும் பல பிரிவுகளைத் தருகிறது. இவற்றை ஏற்கும் மன நிலையில்தான் எமது வாழ்வின் வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது.

கருவுற்று தாயிடம் இருந்து சேயாகப் பிறந்தபோது பிரிக்கப் பட்டதால்தானே ஒரு தனிப் பிறப்பாகின்றோம். பின் அம்மா, அப்பா சகோதர உறவு, அதைச்சூழவும் பல உறவுகள் அறிமுகமாகிறது பார்த்தாயா?

பள்ளிக்கு செல்லும் பருவம் வந்ததும் வீட்டில் இருந்து சிறு பொழுது பிரிக்கப்பட்டபோது அழுது கண்ணீர் வடித்தோம். ஆனால் ஆசிரியர், மாணவர், நண்பர் உறவு ஏற்பட்டதே, வேலைத்தளத் தில் புதிய வேலைத்தள உறவுகளுடன் சங்கமமாகின்றன. பதவி உயர்வு, பதவி உயர்வுகளுக்கேற்ப சில சந்திப்புக்களை ஏற்படுத்து கின்றதே,

திருமண உறவால் தாய், தந்தை சகோதரர் பிரிவு, இவை சில சமயம் இருப்பிடம், சூழல், ஏன் சொந்த நாட்டை விட்டுக் கூட பிரிய வைத்த போதும் அவை புதிய உறவுகளை தருகிறது. பார்த் தாயா? சில உறவுகள் முதுமை, நோய், விபத்து, திடீர் இழப்பு என்பன எம்மைக் கலங்க வைக்கிறது. இவை இக்காலத்தில் சகச யாகி விட்டபோதும், அதன் பிரிவை ஏற்க முடியாது துயரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழ்கின்றோம். எல்லோர் வாழ்விலும் உறவுகள் மட்டும் தொடர் கதை அல்ல. பிரிவுகளும் எமக்குச் சரி பாதிதான் என்பதனை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவற்றை ஏற்றுக்கொள்ளா விட்டால் விரக்தியாய் காலம் கரையும். ஏற்றுக்கொண்டால் புது உறவு மகிழ்வைத் தரும். விரக்திக்கும், வேதனைக்கும், துயருக்கும் முகம் கொடு. அதனை எதிர்கொண்டு வாழக் கற்றுக்கொள்.

நற்கனி கொடுக்கும் மரத்தில் சில கிளைகளை வெட்டிச் செப்பனிடுவதால் அதிக விளைச்சல்காண முடிகிறது. சில சந்தர்ப்பங்களில் நல்ல உறவுகள் பிரிவது, துன்பமாக இருந்தபோதும், அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதும் தவிர்க்க முடியாததொன்றாக இருக்கிறது. வாழ்வின் உறவும் பிரிவும் உன் உள்ளத்தைப் பதப்படுத்தியிருக்கும். அதை உன் மடலில் அடுத்த இதழிற்கு எழுதுவாயா? எதிர்பார்க்கிறேன்.

உள்ளத்தைத் தொடும் உங்கள் மடல்
புரியவைக்கட்டும்.

இப்படிக்கு
அன்புமறவா
யோகா

---



# கருத்துக் குவியல்

மனித ஆளுமை வளர்ச்சியை

**பய உணர்வு**

பாதிக்கின்றது / பாதிக்கவில்லை

**30 - 4 - 97 க்கு முன் உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.**

---

# வழிகாட்டும் ஆளுமை

## பன்மொழிப் புலவர்
## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (அ.ம.தி) இந்த நூற்றாண்டின் மாமனிதன். வழிகாட்டும் ஆளுமைகொண்ட தலைவன். இவ்வாண்டு அவர் அமலபதமடைந்து அரை நூற்றாண்டு நிறைவாகிறதையொட்டி அவரின் வழிகாட்டும் ஆளுமையை இக்கட்டுரை ஆய்கிறது.

கல்விமான் காடினர் சிற்றம்பலத்தின் மூத்த மகள் தங்கமுத்து இவர் தாய். வேலக்கைப் பிள்ளையார் கோவில் பரிபாலகர்—மானிப்பாய்க் கல்லூரி சட்டம்பியார் ''பிள்ளை உபாத்தியாயர்'' சாமிநாதபிள்ளை இவர் தந்தை. வைத்திலிங்கம் ஞானப்பிரகாசராகி, ஞானப்பிரகாசர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. ஆகி, பின் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி ஆகியது ஒரு கால்நூற்றாண்டுக் கதை.

பச்சிளம் பாலகன் தந்தையை இழந்தது ஒரு மாபெரும் உளவியல் தாக்கமாகும். ஆனால் சிறிய தந்தை தம்பி முத்துப்பிள்ளையின் ஆரம்ப மண வாழ்வில் பிள்ளை இன்றி இருந்ததும் அதை ஞானப்பிரகாசர் நிறைவு செய்ய வேண்டி இருந்ததும் அத்தாக்கத்தை நிறைவு செய்தது என்று தான் உளவியல் ரீதியாக நாம் ஆய்வு செய்ய வேண்டி இருக்கிறது. சிறிய தந்தை ஒரு பலத்த பன்முக ஆளுமை கொண்ட மனிதன். அந்த ஆளுமை ஞானப்பிரகாசருக்கும் அவரின் ஆளுமைக்கும் பலம் சேர்த்திருக்கிறது. வழிகாட்டியிருக்கிறது.

சிறிய தந்தையார் தம்பி முத்துப்பிள்ளை நூலாக்குதல், நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தல், அச்சுக்கோத்தல், புத்தகம்வெளியிடுதல், பாடல் இயற்றல், பத்திரிகை நடாத்துதல் என்ற தன் வேலைகளோடு பதிவுக்காரியஸ்தர், பகுதிப் பராபத்தியக்காரன் என்ற அரசப் பணிகளையும், கோவில் மூப்பர், மக்கள் பணியாளன் என்ற பொதுப் பணிகளையும் செய்து ஒப்பாரும் மிக்காரும் இன்றி இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவரை சிறிய தந்தையார் என்று அழைக்க அஞ்சுகிறேன். என் குருநாதன் என்றால் அது எனக்கு உவப்பாயிருக்கும்'' என்று ஞானப்பிரகாசரே குருத்துவ வெள்ளி விழாவில் குறிப்பிட்டதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இவை எல்லாம் ஞானப்பிரகாசரின் ஆளுமையின் அத்திவாரங்கள். அவரது ஆளுமை ஆய்வின் அடித்தளங்கள். மானிப்பாய் — அச்சுவேலி —நல்லூர் என்ற முக்கோணத் தொடர்பின் முழுவிளக்கங்கள்.

இவைதான் அவரை வழிகாட்டும் ஆளுமை கொண்ட, இந்த நூற்றாண்டு நினைவு கூருகின்ற மாமனிதனாக மாற்றி அமைத்தன. தமது 72 வருட வாழ்வில் 42 வருடங்கள் சமயப்பணியும், தமிழ்ப்பணியும் புரிந்தார்.

37 பங்குத் தளங்களில் பணியாற்றி 24 ஆலயங்களை அடியிட்டு ஆயிரம் ஆயிரம் உள்ளங்களில் நற்செய்தியை தூவிவிட்ட சமயப் பணியை யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபை மறந்துவிடமுடியாது. தமிழ் மொழிநூல்கள், சமயநூல்கள், தர்க்கநூல்கள், பிறமதநூல்கள் ஆங்கிலநூல்கள் என 121 நூல்களை எழுதி, பல நூல்களை மொழி பெயர்ப்புச் செய்து, பல நூல்களைப் பதிப்புச்செய்த தமிழ்ப்பணியை தமிழ் கூறும் நல்லுலகம் என்றுமே மறுத்து விட முடியாது.

பல பல்கலைக் கழகங்கள் சேர்ந்து செய்ய வேண்டிய பணியை தனி மனிதனாக நின்று மானிடவியல், வரலாறு, சமூகவியல், மொழியியல், தர்க்கவியல், சமயவியல் என்பவற்றில் மேற்கொண்ட ஆய்வுகளை எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஏற்றுக் கொள்கின்றன. ஒரு குறிப்பிட்ட துறையில் விசேடசித்தி பெற்று ஆய்வு நடத்துவதற்குப் பதிலாக பல்வேறு துறைகளில் ஒரே நேரத்தில் பல ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்று தன் தனிமனித கடின உழைப்பை உலகிற்கு வெளிப்படையாகக் காட்டினார்.

70 மொழிகளைத் தெரிந்து அதில் 18 மொழிகளைப் பேசவும் ''பன் மொழிப்புலவர்'' என்ற பெயரைப்பெற்றுக் கொடுத்ததில் எந்த வியப்பும் இல்லை. மொழி ஆராட்சியின் பேராற்றலைப் போற்றி 1939 இல் ஜேர்மன் அரசும், 1981 இல் இலங்கை அரசும் தத்தம் நாட்டு முத்திரைகளில் அவர் முகத்தை பொறித்தமை அவரின் பணிக்கான, சரித்திரப் பதிவுகளே. எந்த பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்காமல். மேற்படிப்பிற்காக வெளிநாடுகள் போகாமல், தன் தனிமுயற்சியாலும், கடின உழைப்பாலும் 1940ஆம் ஆண்டில் இருந்து இலங்கை அரசு கையெழுத்துப் பிரதிகளின் ஆய்வுக் குழுவிலும், 1944 இல் இலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக "செனட்" சபை உறுப்பினர் குழுவிலும் பணியாற்ற அழைக்கப்பட்டமை அவரின் அறிவிற்கான சரித்திரப் பதிவுகளே.

மறைப் பணியாளன், வரலாற்று ஆசிரியன், மொழி வல்லுனன், எழுத்தாளன் என்று பல நிலைகளை ஒருவராக நின்று யாரும் செய்யவும்மில்லை. இனிச்செய்யப் போவதுமில்லை. ''இத்தகைய மேதாவிகள் உலகில் அடிக்கடி தோன்றுவதில்லை. அப்படித் தோன்றினாலும் யாழ்ப்பாணத்தில் தோன்றுவார்கள் என்று சொல்லுவதற்கில்லை, தினகரன்—22.1.1947 தமிழ் கூறும் நல்லுலகம் இந்த நூற்றாண்டின் இந்த மாமனிதனின் வழி காட்டும் ஆளுமையை மறந்து விடவோ மறுத்துவிடவோ முடியாது. இவரின் ஆளுமைக்கு உறுதியான அறிவு —பொருளாதார —ஆளுமைப் பின்புலமும், சமய சமூக வாய்ப்புக்களும் கடின உழைப்பும், தனி மனிதமுயற்சியும், தளராத இறைப்பற்றுமே துணை நின்றிருக்கின்றன. இவையே இவரை வழிகாட்டும் ஆளுமை கொண்ட மனிதனாக மாற்றியிருக்கின்றன. இவையே இவரது புத உடல் மறைந்தாலும் புகழ் உடல் மறையாமல் இன்னும் பாதுகாக்கின்றன.

---

# எதிர்பாருங்கள்!
# எழுதுங்கள்!!

1997 - வது வருடத்திற்கான எம் அடுத்த இதழ்களில்...

- பயம் (சித்திரை - ஆனி)
- கவலை (ஆடி - புரட்டாதி)
- பதட்டம் (ஐப்பசி - மார்கழி)

'நானை' அலங்கரிக்க உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு

★ சக்தி ★

அந்த மரநிழலில் உட்கார்ந்திருந்த மனித உருவம் தனது உடல் சோர்வுக்கு இடந்தேடிய திருப்தியில் கண்களை மூடிக்கொண்டது. உளச்சோர்வுக்கு ஒரு நிழலை தேட அதனால் முடியவில்லை குடும்பம், நண்பர்கள், சமூக சூழ்நிலைகள் அதற்கு இயைபாக அமையவில்லை — கண்களைத் திறந்தபோது அந்த மரத்தின் வேர்களை அண்டிக் கலைந்து சென்று கொண்டிருந்த எறும்புக்கூட்டங்கள் அவனை ஒரு தடவை ஈர்த்து நின்றன. தாம் சேகரித்து வைத்த உணவுப்பண்டங்களை வாயில் கவ்வியபடி ஒழுங்காக சுறுசுறுப்பாகச் சென்றுகொண்டிருக்கும் அந்த எறும்புக் கூட்டங்களின் காட்சி இடப் பெயர்வின் போது தென்மராட்சி நோக்கி புறப்பட்ட அந்த அவலக் காட்சியை ஒரு தடவை கண்முன் நிலைப்படுத்தியது. மெதுவாக ஒரு தடிக்குச் சியால் எறும்புகளின் அந்த ஒழுங்கை குலைக்க முயற்சித்தான். எறும்புகள் அங்குமிங்கும் கலைந்தன. ஒரு நொடியில் மீண்டும் ஒழுங்கு, சுறுசுறுப்பு ........— இந்த எறும்புக் கூட்டங்கள் இருந்த இடத்தில் ஏதோ சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது மழை கால அறிகுறியால் அவை இடம்பெயர்ந்து வசதியான இடத்துக்கு சென்று கொண்டிருக்க வேண்டும்.

ஓ...எறும்புக் கூட்டங்களே உங்களுக்கும் எமது கதியா? அவனுக்குள் ஒரு கேள்வி மறுகணம் ஒரு அசட்டுச் சிரிப்புடன் முணுமுணுத்துக் கொண்டான் நீங்கள் கலைந்து செல்கின்றபோதும் உங்களுக்குள் ஒரு ஒழுங்கு. உங்களுக்குள் ஒரு ஒற்றுமை, ஒரு சுறுசுறுப்பு, சேகரித்து பொருட்களை எடுத்து செல்வதில் உள்ள ஆர்வம் ஒழுங்கு ........ ''கேடுகெட்ட மனித இனம் உங்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவைகள் பலவுண்டு'' அவனின் சிந்தனை அலை பாய்ந்தது. அவனின் காலில் சுள் என்ற ஒரு வலிஉணர்வு. எறும்புக் கூட்டங்களில் ஒன்று கடித்துக் கொண்டது அந்தவலி 'ஓ மனிதனே நாங்கள் கலைந்து செல்கிறோம், ஆனால் நான் காவிச்செல்வது "எனது'' பொருட்களை அல்ல, எமது பொருட்களை நான் சென்று கொண்டிருப்பது எனது இடத்துக்கல்ல 'எமது' இடத்துக்கு'' அந்தச் சிறு எறும்பு அவனுக்கு ஒரு தத்துவத்தை கூறி விட்டுச் செல்வது போன்று இருந்தது. ''எறும்பை விட பாடம் கற்றுத் தரும் ஆசான் வேறு ஏதும் இல்லை. ஆனால் அந்த எறும்போ தன் வாயைத்திறந்து பேசுவதே இல்லை" எங்கோ படித்த அந்தவாசகங்கள் அவனை மேலும் சிந்திக்கவைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சிந்திக்க சில வரிகள்

உலக சிந்தனையாளர்களின் உள்ளங்களில் இருந்து வெளியான பொன்மொழிகள் எமது வாழ்க்கையை நெறிப்படுத்த வளப்படுத்த அருந்துணையாக அமைகின்றன.

நிலத்தைப் பண்படுத்துவது போல உற்சாகமான ஒரு மன நிலையை நாம் முதலில் உருவாக்கிகொள்ளல் வேண்டும். ''இது முடியும்'' என்ற மனநிலை ''சந்தோசமாக வாழ்வேன்'' என்ற தீர்மானம் ''முடிந்தவரை உதவுவேன்'' என்ற மனப்போக்கு ''பெருந்தன்மையுடன் நடப்பேன்'' என்ற உயர்ந்த உள்ளம். இவைதான் சாதனை புரிய மனிதனின் அடித்தளமாக அமைகிறது

நம்மால் முடியுமா? என்ற மலைப்பு, இவ்வளவுதான் முடியும் என்று எம்மால் இடப்படும் அளவுகோல், தோற்றுப்போய் விடுவோமோ என்ற பயம், பிறர் என்ன சொல்லுவார்களோ என்ற சந்தேகம் இவை எல்லாம் ஆர்வத்துக்கு முட்டுக்கட்டையானவை.

''பலவீனமான மூளையில் நாம் ஒன்றையும் செய்ய இயலாது நாம் அதைப் பலப்படுத்த வேண்டும்''

''மக்களிடம் சக்தி இருக்கிறது அவர்களிடம் இல்லாதது எதையும் செய்ய வேண்டும் என்ற மனவுறுதிதான்''

''காலத்தின் அருமையை நாம் உணர வேண்டும் காலமே உயிர் அதை வீணாக்குவது தற்கொலைக்கு சமமானது''

''உலகிலேயே மிகச்சிறந்த சீர்திருத்தவாதி தன்னை சீர்திருத்திக் கொள்பவன்தான்''

''வேகமாக உயர்வது அல்ல பெரியது எப்போதுமே உயர்ந்த படி இருப்பதுதான்''

''தவறை ஏற்பதுதான் தன்மானத்தின் உச்சநிலை''

''பிறருக்காக நம் நெஞ்சம் உருகும் போதுதான் அது நிஜமாக வளர்கிறது''

''மூடநம்பிக்கை, மன வலிமை இல்லாதவனின் மதம்''

''முயற்சி இல்லாத நம்பிக்கை கப்பல் இல்லாத கடல் பயணம் போன்றது''

''நீங்கள் சோம்பேறியாக இருந்தால் தனிமையில் இருக்கவேண்டாம். தனிமையில் இருந்தால் சோம்பேறியாக இருக்கவேண்டாம்''

எண்ணிறைந்த பொன்மொழிகள். உள்வாங்கிகொள்ள உங்கள் இதயத்தைத் திறந்து கொள்ளுங்கள். இரை மீட்டுக்கொள்ள உங்கள் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய உள மாண்பு

**திருமதி பி. எவ். சின்னத்துரை**
அதிபர், சென். சாள்ஸ் மகாவித்தியாலயம்.

ஒரு கல்வி முறையின் வளர்ச்சி அல்லது அதன் ஆற்றல் பெரும்பாலும் ஆசிரியரின் தனி இயல்பிற் தங்கியுள்ளது எனலாம். சமூகத்தில் விஞ்ஞான வளர்ச்சி, மற்றும் சகல துறைகளும் நவீன மயப்படுத்தப்பட்டு அரச நிர்வாகமும் சீராக நடைபெற்றாலும் கூடக் கல்வியின் வளர்ச்சி அதன் விழுமியம் ஆசிரியரின் தனிப்பட்ட நிலையில் தான் பெரும்பாலும் தங்கியுள்ளது. இதனால் தான் முறையான கல்வி வளர்ச்சிக்குத் தகுதியான, பயிற்சியளிக்கப்பட்ட சிறப்பாக ஆசிரியத்துவத்தின் புனிதத்துவம், முக்கியத்துவத்தை உணர்ந்த நிறையாசிரியர் குழாம் தேவை என்பர் கல்வியலாளர்

உளமாண்பு என்ற பதம் பலரகப்பட்ட மனிதருக்கும் பல்வேறுபட்ட பொருளைத் தரினும் ஆசிரியரைப் பொறுத்தவரை அது தனித்துவம் வாய்ந்த தொன்றாகக் கருதப்படுகிறது நாட்டின் பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலும் பல்வகைப்பட்ட சமூகக் காரணிகளின் மத்தியிலும் 'ஆசிரியத்துவம்' கல்வியின் முக்கியத்துவம் கருதி வளர்ந்தும் வளர்க்கப்பட்டும் வருகின்றது. இவர்களின் உளமாண்பு வளரப் பலகாரணிகள் ஊக்குவிக்கின்றன. இதைஅளவிடவும் பல வேறுவகை செயல் திட்டங்கள் உதவுகின்றன. ஓர் ஆசிரியரின் உள எதிர்பார்ப்புகள் எந்தளவிற்கு நிறைவேற்றப்படுகின்றதோ அந்தளவிற்குத் தொழில் சார்ந்த உளநிறைவும், மன மகிழ்ச்சியும் ஏற்படும் என விளக்குகின்றது "உள எதிர் பார்ப்புக் கோட்பாடு'' (Expectancy Theory) ஆசிரியத் தொழில் மூலம் ஏற்படும் தொழில் சார் உள நிறைவு ஆசிரியத்துவ உளமாண்பினை வளர்க்கின்றது.

ஆசிரியத் தொழில் விருப்பை ஏற்படுத்தும் காரணிகளும் உண்டு, வெறுப்பை ஏற்படுத்தும் காரணிகளும் உண்டு. இதனை விளக்கும் கோட்பாடுதான் ஈர் காரணிக் கோட்பாடு. இவற்றுள் விருப்பை ஏற்படுத்தும் காரணிகள் ஆசிரியத்துவ உளமாண்பினை மேல்எடுத்துச் செல்கின்றன ஆசிரியத் தொழிலை ஏற்கும் ஒருவர் முதலில் அதைப் பூரண விருப்புடன் ஏற்பது அத்தியாவசியமாகின்றது. மனவிருப்புடன் இத் தொழிலை புரிய முன்வர வேண்டும். அது விருப்பமற்ற வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டா வெறுப்பாக ஏற்கப்பட்ட தொழிலாக அல்லது தவறான தெரிவில் அமைந்ததாக இருப்பது பாதகமான விளைவுகளையே தரும்.

தான் பணிபுரியும் பாடசாலையில் தனது பணி மிகவும் வேண்டப்படுகின்றது என்ற உணர்வு ஆசிரியருக்கு ஏற்படவேண்டும். பாராட்டும் கணிப்பும் உடனுக்குடன் வழங்கப்படவேண்டும். இதன் மூலம் ஏற்படும் தன்நிறைவு உளமாண்பினை வளர்க்கும் சக்தியாகும். ஆசிரியர் சுயமாக முன்னேறக்கூடிய வாய்ப்புகள் இருக்க வேண்டும். அவரது கல்வித்தரம் வளர்க்கப்பட வேண்டும். ஆசிரியர் சாகும்வரை கற்கவேண்டும் என்று வலியுறுத்தினார் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள். ஆசிரியர் தாமாகவே முன்வந்து பாடசாலையின் பணிகள், செயல்பாடுகளில் பங்கு கொள்ள வேண்டும். தனக்களிக்கப்பட்ட நேர சூசிப்படி கடமையாற்றுவதுடன் தன்பணி முடிவடைந்து விட்டது என எண்ணும் ஆசிரியர் நல்லாசிரியன் அல்ல. எத்தனை பேருக்குக் கற்பித்தேன் என்றளவில் அமையாது எத்தனை பேர் குறிக்கப்பட்ட கல்வித்தரத்தை அடைந்தனர் என்பது ஆசிரியர் உளமாண்பை எடுத்துக்காட்டுவதாக அமையும்.

ஆசிரியர் உளமாண்பின் வளர்ச்சிக்கும் பாதகமான வெறுப்பை ஏற்படுத்தும் காரணிகளும் உண்டு. மேலதிக வேலைப்பளு, தவறான மேற்பார்வைகள், கணிப்பும் பாராட்டும் உடன் அளிக்கப்படாமை மனத் திருப்தி அளிக்காத பாடசாலைச் சூழல் என்பன இவற்றிற்கு உதாரணங்களாகும்.

அடுத்ததாகக் கல்வியுலகில் வினைத்திறனுடைய ஒழுங்கமைப்பும், தலைமைத்துவமும் முக்கியபங்கு எடுக்கின்றன. சகல பணிகளையும் ஒருங்கமைத்துப் பல் வேறுபட்ட திறன்களையும், ஆளுமைப்பண்புகளையும் திட்டமிட்டுச் செயல் படுத்தும் போது உளத் திருப்தி நிறைவு அடைய வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

இன்று ஆசிரியர்களை தமது செயன் முறை முடிவுகளைத்தாம் தீர்மானிப்பதற்குச் சுதந்திரம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பது கேள்விக்குறி. Lewin, White Lippitt, லூவின், வைற், லிப்பிற் என்போர் மூன்று வகைப்பட்ட ஆசிரியர்கள் மூலம் மாணவர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் தொழில்பாட்டை ஆராய்ந்தனர். 1வதுவகை சனநாயகமுறையிலான ஆசிரியர். 2வது வகை சர்வாதிகாரமான போக்குடைய ஆசிரியர். 3வது வகை தலையிடாத(Laissez—Faire) தன்மையுடையவர். இவர்களுள் சனநாயக முறையிலான ஆசிரியர்—மாணவர் தொகுதி பயனுள்ள தொகுதியாக அமைந்ததைக்கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சுதந்திரமான போக்கு கூடிய உளநிறைவை அளிக்கின்றது. கட்டுப்பாடுகளும், நெகிழ்ச்சியற்ற தன்மையும் உளமாண்பை எடுத்துக் காட்டத்தடைகற்களாக அமையும்.

ஆசிரியப்பணி தனியே பாடசாலையுடன் மட்டும் அமைந்ததொன்றல்ல. முதலில் ஆசிரியர் மட்டத்தில் அதிபர், சக ஆசிரியர்களுடன் பரஸ்பரம் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அடுத்துப் பெற்றோர், நலன் விரும்பிகள் அடங்கிய சமூகத்தின் தேவைகள் எதிர் பார்ப்புகளையும் கருத்தில் கொண்டு சீரானவுற்றுடன் பணியாற்றல் உளமாட்சி நிறைவுக்கு அத்தியாவசியமானதாகும்.

எவ்விதத்தில் நோக்கினும் சமூக சேவைகளுள் முதன்மையானது கல்விச் சேவையாகும். ஒரு நாட்டின் எதிர்காலமே அதன் கல்வி அமைப்பில் தான் பெரிதும் தங்கியுள்ளது என்பர் ஆன்றோர். இன்றைய சூழ்நிலையில் சமூகம் ஆசிரியனிடம் எதிர் நோக்குவது நிறைமாந்தரை உருவாக்கம் செய்வதாகும். இதன் சிற்பி ஆசிரியனே. எனவே வாண்மையுடைய நல்லாசிரியர் குழாம் இன்றைய நிலையில் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றனர். 'எழுத்தறிவித்தோன் இறைவன்' என்பதும் நாமறிந்த உண்மை "சிறந்த ஆசிரியன் ஒரு நல்ல நூலுக்குச் சமமானவன்" என்கிறார் மகாத்மாகாந்தி அடிகள். "நல்லாசிரியன் தன் மாணாக்கரை உருவாக்க அதனால் நல்ல பிரசைகள் கொண்ட நாடு உருவாகும்" என்கிறார் டாக்டர் இராதா கிருஷ்ணன். எனவே சமூகமும், கல்விநிர்வாகமும் ஆசிரியர் உளமாண்பின் முக்கியத்துவம் கருதி அவற்றை விருத்தி செய்ய முன்வர வேண்டும் ஆசிரியரும் தம் வாண்மை, மாண்புச் சிறப்புக்கருதிக் கருமமாற்றல் அவசியம்.

□

## ஓவியக் கலைஞர்களே!

நான் அட்டைப் படத்தை அலங்கரிக்க உங்கள் ஓவியங்களை வரைந்து அனுப்புங்கள்.

சிறந்ததெனத் தெரிவுசெய்யப்படும் ஓவியம் அடுத்து வரும் தலைப்புகளுக்கேற்ப அட்டைப் படமாகப் பிரசுரிக்கப்படும்.

ஆ - ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.

# சிறுவர்களைக் காப்பாற்றுங்கள்

ரேணுகா

**கீழ்த்தரமான** நடவடிக்கைகள் எனக் கருதப்பட்ட விபச்சாரம், ஆபாச நடவடிக்கைகள் என்பன இன்று உலகளாவியரீதியில் வளர்ச்சியடைந்து வருவது கவலை தரும் விடயமாகும். வறுமை, பேராசை, மலிவான பாலியல் சார் நடவடிக்கைகட்கு ஏற்பட்டுள்ள கிராக்கி என்பன இந்நடவடிக்கைகட்கு ஏதுவாக உள. ஆபாச சஞ்சிகைகள் ஆபாசப்படங்கள் போன்றவை தடை செய்யப்படவேண்டும் என்ற குரல்களும் இன்று நாடுகளிடையே எழுப்பப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இவற்றால் இளைஞர்கள் மட்டுமல்ல ஓர் முழுமையான சமுதாயமே பாழாகிப்போகும் நிலை உருவாகியுள்ளதாக சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

வறிய நாடுகளிலும், ஏன் செல்வந்த நாடுகளிலும் பாலியல் சார் நடவடிக்கைகட்கு சிறுவர், சிறுமியரைத் துர்ப்பிரயோகம் செய்வதனால் அவர்கள் வாழ்க்கையே நாசமாகி வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த தேசிய மட்டத்திலோ, சர்வதேச மட்டத்திலோ அதிக சிரத்தை காண்பிக்கப்படுவதில்லை. உல்லாசப் பயணிகட்கு ஊக்கம் கொடுக்கும் ஓர் பிரச்சாரமாக இவ்வாய்ப்பு விளம்பரப்படுத்தப்படுவது விந்தையாக உள்ளது. தென், தென்கிழக்காசிய நாடுகள் ஐரோப்பிய கனவான்களின் பாலியல் வேட்கைக்கு தளமாக மாறிவரும் நிலை கவலைக்குரியது. பல நாடுகளில் பாலியற் புணர்ச்சிக்குத் துணையாக சிறு பிள்ளைகளை பயன்படுத்தும் நிலை பெருகிவருகிறது. இதற்குக் காரணம் சிறு பிள்ளைகள் மத்தியில் எச்.ஐ.வி. என்னும் ஆட்கொல்லிநோய் அநேகமாக பீடிப்பதில்லை என்ற தவறான நம்பிக்கையாகும். இது முற்றிலும் உண்மையான விடயமன்று. பாலியல் வேட்கையற்ற சிறுவர்கட்கு பாலியல் துர்ப்பிரயோகம் ஓர் தண்டனையே, பல நாடுகளில் சட்டத்தை நிறைவேற்றுவோர் பாலியல் துறையில் சிறுவர்கள் துர்ப்பிரயோகம் செய்யப்படும் விடயம் குறித்து பாராமுகம் காட்டி வருவதை மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் சமீபத்திய அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறிய குடும்பங்களைச்சேர்ந்த சிறுவர்கள் மணமுறிவு ஏற்பட்ட குடும்பங்களைச் சார்ந்த சிறுவர்களே பெரும்பாலும் ஒழுக்கச் சீர் கேடுகளுக்கு ஆளாகின்றனர். சில்சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் தாய்மாரே விபச்சாரம் செய்பவர்களாகவும் இருக்கின் றார்கள். இவர்களுக்கு விபச்சாரம் இலாபகரமான வாழ்க்கைமுறை யாக இருக்கலாம். ஆசிய நாடுகள் சில வற்றில் இலட்சக்கணக்கான சிறுவர் சிறுமியர் பாலியல் நடவடிக்கைகட்குத் துணை போவதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

வீட்டை விட்டு ஓடிப் போகும் சிறுவர் இச் சகதியில் இலகு வில் வீழ்ந்து விடுகின்றனர். பாலிய விபச்சாரம் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் எனச்சட்டங்கள் எல்லா நாடுகளிலும் உண்டு. ஆயினும் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டப்படுவதில்லை. சமூதாயப் பிரச்சனைகளை சட்டத்தினால் மட்டும் தீர்க்க முடி யாது. சமுதாய உணர்வுடன் கூடிய தடுப்பு நடவடிக்கைகள் தேவை. சமூகப் பாதுகாப்பு மற்றும் பெற்றோர் தமது குடும்பங்கள் சித றாமல் பாதுகாக்கும் ஒழுங்குகள் அவசியம். உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் பொது மக்களுக்கு அறிவூட்டல் அவசியம்.

சிறுபிள்ளைகள் அவர்களுக்குரிய கௌரவத்துடனும், மதிப் புடனும் நடத்தப்படல் வேண்டும். மேற்குறித்த சகல நிலைகளி லிருந்தும் சிறுவர்களைக் காப்பாற்றவும், பாலியல் தண்டனைகளி லிருத்து அவர்கள் விடுபடவும், துர்ப்பிரயோகம் ஆளானவர்கட்கு சிகிச்சை அளிக்கவும் கூடிய செயற்திட்டங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து செயற்படுதல் விரும்பத்தக்கது. இவ் வாறான புதிய பிரச்சினைகள் எமது சமூகத்தினுள் நுழைய விடாது பாதுகாக்க நாம் எல்லோரும் விழிப்புடன் செயற்படுதல்வேண்டும்.

---

# வரவும் பிரிவும்

அமலமரித் தியாகிகள் சபையின் புதிய வடமாநில முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்ட அருட்திரு யேசு நேசனை வரவேற்று அவர் பணிசிறக்க வாழ்த்துகிறோம்.

ஆறு ஆண்டுகாலம் வடமாநில முதல்வராக அரும் பணியாற்றிய அருட்திரு பி.பி. பிலிப் அடிகளாருக்கு எமது இதயபூர்வமான நன்றிகள்.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைத் தடைகளை அகற்றுவோமா?

**செல்வி எஸ். எதிர்மனசிங்கி**

ஒவ்வொரு மனிதனும் சிசுவாகத் தாயின் கருவறையில் உரு வாகியது தொடக்கம் மரணிக்கும் வரை அவனது வாழ்வில் இடைத் தாக்கம் புரியும் காரணிகள் பல. குழந்தை கருப்பையில் உருவெடுக்கும் போது உள்ள தாயின் மனோநிலை, அது வெளி உலகில் காலடி எடுத்து வைத்த பின் ஏற்பட்ட உறவுகள் வளர்கப்பட்ட முறைகள் தான் பிள்ளையின் தனி மனித ஆளுமை (Personalty of evelopment) உருவாக்கலில் முக்கிய பங்கெடுக்கின்றது. இந்த ஆளுமை உருவாக் கத்தில் ஏற்படும் சில குறைபாடுகள் காரணமாகவே சில உளவியல் நோய்கள் உருவாகின்றன. இதற்கு சிறந்த உதாரணம் Odsessive Compulsive neurosis ஆகும். இந்நோய் பொதுவாக மிகவும் கண் டிப்பான பெற்றோரால் வளர்கப்படும் பிள்ளைகளுக்கு, பொதுவாக அவர்கள் பெரியவர்களாகிய பின்பு ஏற்படுகின்றது. இவர்களது வாழ் க்கை மிதமிஞ்சிய கட்டுக்கோப்புக்கு உட்பட்டதாக இருக்கும். இவர் சுத்தம், நீதி நேர்மை ஒழுங்குகள், சட்டதிட்டங்கள் போன்றவற்றில் அதிதீவிர நாட்டமுடையவர்களாக (Extreme) இருப்பார்கள். ஆரம் பத்தில் இக் குணாதிசயங்கள் மிகவும் நன்மை பயப்பனவாக இருக்கும்.

இவர்களது வாழ்வில் சிறிய குழப்பங்களோ, அல்லது ஏமாற் றங்களோ ஏற்படும்போது அதற்குத் தாக்குப்பிடிக்க முடியாதவர் களாகி விடுவார்கள். அதன்போது இவர்களது இத்தகைய குணாதி சயங்கள் மேலும் தீவிரமாகும், இதனால் இவர்களுக்கே பெரும் துன் பமும் தம்மை கட்டுப்படுத்த முடியாத நிலையும் உருவாகும் இதனால் இவர்கள் பிறருடைய கண்களுக்கு ஆசாதாரணமாக தென்படுவர். இக்கட்டத்தில் இவர்கள் உளநோயாளிகளாக மாறி உள வளத்துணை பெறவேண்டியவர்களாவார்கள். நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரினால் எம்மத்தியில் இவ்வாறான உளநோயினால் பாதிக்கப் பட்டவர்கள் பலர் உள்ளனர். ஆனால் எம்மில் பலருக்கு இது ஒரு உளநோய் என்று தெரியாததாலும், உளவளத்துணை மூலம் இது குணப்படுத்தக் கூடிய ஒன்று என்று தெரியாததாலும் தொடர்ந்து துன்பப்பட வேண்டி உள்ளது. எனவே யாவரும் இதன் குணங்குறி களை அறிய முயலவேண்டும். Obsessive, Compersive, neurosis என்னும் மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வின் உரு வாக்கப் படிமுறை, உறவுமுறை, தாக்கங்கள் பழக்கவழக்கங்கள் என்பனவற்றை இனங்காணுவோம். எமது குழந்தைகளை நல்ல உள வளத்துடன், ஆரோக்கியமான ஆளுமையுடன் (Healthy Personalty) வளர்க்க பெற்றோர் பெரியோர் உதவுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் உயர...

ஏ.பி.வி.கோமஸ்-
மாத்தளை.

உலகில் வாழும் மக்கள் எல்லாம்
உயர்ந்து வாழ வேண்டில்
உளத்தை முதலில் உயர்ந்ததாக
ஆக்கிக் கொள்ள வேண்டும்
அழகு அன்பு அறிவு ஆற்றல்
அனைத்திற்குமதுதானே
பழகு தளமாம் அத்திவாரம்
ஆகும் நீரே கண்டீர்

மனித மனது முதலில் உயர்ந்தால்
மகிழ்வு நிலைத்து நிற்கும்
தினமும் உளத்தைத் திடமாய் வைத்தால்
திறமை வந்து சேரும்
கணமும் உளத்தில் தோல்வி காணாதிருந்தால்
கவலை ஒழிந்து போகும்
பணமும் பெயரும் பெறவே முடியா
பணபை மனமே சேர்க்கும்

எனவே உலகில் உயர்வு பெறவே
ஏற்ற தொன்று செய்வீர்
கணமும் உளத்தை கண்யமாக
காத்திடவே விழைவீர்
தினமும் 'ஒருவன்' பாதம் போற்றி
தியானமேதான் செய்வீர்
வனமே எனினும் வளமாய் வாழும்
வழியை நீரே காண்பீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானே வாழ்த்து

நானே!
புத்தாண்டிலே,
புத்தாடையுடனே,
பவனி வரப்போகிறாயாமே.
உனக்கு வாழ்த்து...
சொல்லிட வரவில்லை,
கேட்டல்லவா நிற்கிறேன்,
உள்ளங்களை ஆற்றுப்படுத்தும்
நற்றோழனே!
நின் வரவு
மனதை மகிழ்வித்தாலும்
பொன் கொடுத்தாலும்
மீளப்பெறவே முடியாத
காலங்கள் ... அவலமாய்
கழிந்ததை எண்ணி,
என் மனம் வெதும்புகின்றது.
ஆனாலுமோ,
உன் தோழமையால்
நம்பிக்கை வேரை
நான் பற்றி நிற்கின்றேன்
நடக்கப் போகும்
காலங்களாவது,
வளங்களைத் தருமென்று
வாய் விட்டே
என்னை வாழ்த்தென்று
கேட்டு நிற்கின்றேன்
புதுமைகள் புரிந்தே......
பூமியிலும் நீடூழி
வாழ்வதற்காய்.

க, கமலாம்பிகை

## அடுத்த இதழ்

# பயம்

- ★ பயம் நன்மையானது / தீமையானது
- ★ பயம் ஒரு உளவியல் / உடலியல் நோய்
- ★ பயத்தின் வகைகள்
- ★ பயத்தை போக்குவது எப்படி?

உங்கள் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் உளவியல் சார்ந்ததாக எமது சமூக விழிப்புணர்வுக்கு ஏற்றதாக 30-4.97 க்கு முன் அனுப்பிவையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவியல் பாசறை

சிறுவருக்கான உளவியல் பாசறை நாவாந்துறை சென். நீக்கிலஸ் குருநகர் சென், யேம்ஸ் மகளிர், ஆண்கள் பாடசாலை, குருநகர் சென். றோக், யாழ்ப்பாணம் சென். சாள்ஸ், கொழும்புத்துறை சென். யோசப், பாசையூர் சென் அன்ரனிஸ் பாடசாலைகளில் பயிலும் 5ம் ஆண்டு மாணவர்களில் ஒரு பாடசாலையில் ஐவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் உள வளர்ச்சியை விருத்தி செய்யும் பாசறை 21-2-97 கொழும்புத்துறை, சென் யோசப் பாடசாலையில் நடாத்தப்பட்டது. இப்பாசறைக்கு அருட்திரு எஸ். டேமியன் தலைமை தாங்கினார். விளையாட்டுகள் மூலம் மாணவர்கள் தங்கள் மனஉணர்வுகளை வெளிப்படுத்தியதுடன் பலரோடு பழகவும், மனம்திறந்து பேசவும் இப்பாசறை உதவியது. தங்கள் உளத்தாக்கங்களை வெளிக்கொணர்ந்து நம்பிக்கையூட்டும் உறவுகளை ஏற்படுத்த உதவியதாக் தங்கள் கருத்துக்களை மாணவர்கள் தெரிவித்தார்கள். இப் பாசறையில் றெட்பானா திட்டமிடல் இணைப்பாளர் திருமதி ஒலிவற் ஜெனோவா அல்பிறற் அவர்கள் கலந்துகொண்டார். இப்பாசறை கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.




## மீண்டும் 'அகவொளி' யாழ்நகரில்

குடும்ப உளவளத்துணை நிலையமான அகவொளி நிலையம் மீண்டும் யாழ்நகரில் இயங்குகிறது. இயக்குனர் அருட்திரு இராசநாயகம் அடிகளின் வழிகாட்டலில் குடும்ப உளவள ஆலோசனைகளும், கருத்தரங்குகளும், பயிற்சிகளும் யாழ்நகரின் பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள ''அகவொளி' நிலையத்தில் தம் பணிகளை ஆரம்பித்துள்ளது.

## சாந்தியகத்தின் 'மனவெளி'

சாந்தியகத்தின் வெளியீடான முத்திங்கள் இதழான 'மனவெளி' வெளிவந்துள்ளது. உளவியல் சார் கட்டுரைகள் அடங்கிய முதல் இதழாக, எட்டுப் பக்கங்கள் கொண்ட மனவெளி சாந்தியகத்தில் விற்பனையாகிறது. விலை 20/- ரூபா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் பசிக்கு உணவுண்டு
உள்ளப் பசிர்வுக்கு 'நான்' உண்டு

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



23வது ஆண்டில் காலபதிக்கும்
'நான்' பணி சிறக்க
வாழ்த்துக்கள்

# மணிஓசை பதிப்பகம்

17, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளி நூலகம்.

'NAAN' Psychology - Magazine
O. M. I. Seminary, Colombuthurai.

உள்ளம் மகிழ்ந்திட உளவியல் சிந்தனையூட்டி
23ம் ஆண்டில் கால்பதிக்கும்
'நான்' சஞ்சிகையே வாழி



# S.M.FERNANDO

❀ பார்வைத் துலக்கத்திற்கும்
❀ அழகுத் தோற்றத்திற்கும்
புதிய வடிவங்களில்
கண்ணாடிகள் வழங்குபவர்கள்

## எஸ். எம். பெர்ணாண்டோ

580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இலங்கை வங்கிக்கு அருகில்

மணிஓசை பதிப்பகம் 12, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org